# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI

| | | |
|---|---|---|
| CC.NO.35/2019 | Crime No.: 56/2019 | Police Station : Bhavani P.S. |
| PW : 4 | C.MP. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | அய்யாசாமி | Caste | |
| Father's Name | ராமசாமி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 60 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 187301 the day of | | | 16.08.2021 |

**முதல் விசாரணை**-

நான் பிச்சனூரில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். தேதி நினைவில்லை. 2019-ம் வருடம் 2 வது மாதம், மாலை 4.30 மணியளவில் மூர்த்தி என்பவர் எனக்கு போன் செய்து, எதிரி மோகன் மற்றும் சிவக்குமார் ஆகியோர் வாதி இருசா என்பவர் தோட்டத்தில் உள்ள ஒயரை அறுத்துவிட்டதாகவும், மோகனின் அண்ணன் சிவக்குமார் வாதி இருசாவை கட்டிங் பிளேடில் அடித்துவிட்டதாகவும் கூறினார். நான் பின்பு சம்பவ இடத்திற்கு வந்தேன். அன்றைய தினம் இரவு 7.30 மணியளவில் அங்கு வந்த போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு, எங்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகஜரில் போலீசார் என்னை சாட்சியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டதால். நான் சாட்சி கையொப்பம் செய்தேன். பார்வை மகஜரில் 2 வது கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு சம்பவ இடத்தில் இருந்த ஒயர், கட்டிங்பிளேடு, கல் ஆகியவற்றை எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார். பின்பு கைப்பற்றுதல் மகஜரில் சாட்சியாக கையொப்பம் செய்தேன். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஒயர், கட்டிங்பிளேடு, கருங்கல் ஆகிய சான்று பொருட்கள் முறையே **அ.சா.பொ.1,2,3** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அவற்றைதான் போலீசார் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** -

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய, கால அவகாசம் கூறியதால், மாண்புமிகு உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி, விசாரணை முடிக்கப்பட்டது.

# DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI

| | | |
|---|---|---|
| CC.NO.35/2019 | Crime No.: 56/2019 | Police Station : Bhavani P.S. |
| PW : 5 | C.MP. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | தொப்பநல்லகவுண்டர் | Caste | |
| Father's Name | இருசாகவுண்டர் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 60 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 187301 the day of | | | 16.08.2021 |

**முதல் விசாரணை-**

நான் கோணக்காபாளையத்தில் குடியிருந்துகொண்டு, விவசாயம் செய்து வருகிறேன். தேதி நினைவில்லை. 2 வருடங்களுக்கு முன்பு 2 வது மாதம் மாலை 4.30 மணியளவில், எதிரிகள் மோகன், மற்றும் அவரது அண்ணன் சிவக்குமார் ஆகியோர்கள் எனது மகன் தோட்டத்தில் மோட்டார்ரூம் -ல் உள்ள ஒயரை கட்டிங்பிளேடால் அறுத்ததாகவும், அதற்கு எனது மகன் வாதி இருசா ஏன் ஒயரை அறுக்கிறீர்கள் என்று கேட்டதற்கு, எதிரிகள் இருவரும் நாங்கள் அப்படித்தான் அறுப்போம் என்று கூறிக்கொண்டு, கட்டிங் பிளேடால் எனது மகன் வாதி இருசா-யை அடித்து உதடை கிழித்துவிட்டார்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும், நீதிமன்றத்தில் முன்னிலையாகி உள்ளவர்கள்தான் எதிரிகள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் .

**குறுக்கு விசாரணை -**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய, கால அவகாசம் கூறியதால், மாண்புமிகு உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி, விசாரணை முடிக்கப்பட்டது.